

▸▸ ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி விஸ்வமஹா வித்யாலயா நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தில் சம்ஸ்கிருதம், கலாச்சாரம், யோகா மற்றும் அறிவியல் தொடர்பான கோடை முகாமை துணைவேந்தர் எஸ்.வி.இராகவன் குத்துவிளக்கேற்றி தொடக்கி வைத்தார்.

## ஏனாத்தூர் பல்கலைக்கழகத்தில்

# சம்ஸ்கிருதம், கலாச்சாரம் குறித்த கோடை முகாம் தொடக்கம்

■ சென்னை

காஞ்சிபுரம் அடுத்த ஏனாத்தூரில் அமைந்துள்ள ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி விஸ்வ மஹா வித்யாலயா நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தில் ஆசிரியர்களுக்கும் ஆராய்ச்சி மாணவர்களுக்குமான சம்ஸ்கிருதம், கலாச்சாரம், யோகா மற்றும் அறிவியல் தொடர்பான கோடை முகாம் நேற்று முன்தினம் தொடங்கியது.

புதுடெல்லியில் அமைந்துள்ள மத்திய சம்ஸ்கிருத பல்கலைக்கழத்தின் அஷ்டாதசி திட்டத்தின் கீழ் இம்முகாம் நடத்தப்படுகிறது.

இம்முகாமை பல்கலைகழகத்தின் துணைவேந்தர் எஸ்.வி. இராகவன் குத்துவிளக்கேற்றி தொடக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். அப்போது கலாச்சாரம் மற்றும் அறிவியலுக்கு இடையிலான தொடர்பு மற்றும் அதன் முக்கியத்துவத்தை விளக்கி கூறினார்.

முன்னதாக பல்கலைக்கழகத்தின் பதிவாளர் ஜி.ஸ்ரீநிவாசு வரவேற்புரை வழங்கினார். முகாமின் நோக்கங்கள் குறித்து நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் தேவஜ்யோதி ஜனா எடுத்துரைத்தார்.

இவ்விழாவில் பல்கலைக் கழக பேராசிரியர்களும் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட ஆசிரியர்களும் ஆராய்ச்சி மாணவர்களும் பங்கேற்றனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை பல்கலைக்கழகத்தின் சம்ஸ்கிருதம் மற்றும் கலாச்சாரத் துறையினர் செய்திருந்தனர்.